அங்கே உண்டு உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. கடந்த மாதம்கூட அந்தக் குழந்தைகளுக்கு போளூரிலிருந்து அரிசியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். மலைக்கே போகவில்லை, வழியிலேயே விற்றுவிடுகிறார்கள். விற்றுக்கொண்டு, (குறுக்கீடு) Case ஆகி நான்கூட கலெக்டர் மற்றும் D.R.O. ஆகியோரிடம் பேசியிருக்கிறேன். Case இருக்கிறது. அந்தக் குழந்தைகளை வீட்டுக்குத் துரத்திவிட்டு அரிசியைக் கொண்டுபோய் விற்று விடுகிறார்கள். வழக்கு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதை அமைச்சர் அவர்களுடைய knowledge-க்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி என்பதைச் சொல்லுங்கள்.

திரு. போளூர் வரதன்: அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறையாகச் சொல்லவில்லை. தவறுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கொண்டுவாருங்கள். கேள்வியைச் சொல்லுங்கள்..

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்களுடன் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 191, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

191—

பேருந்து வசதி

***53542—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார் பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் வரை செல்ல அரசு பேருந்து வசதி செய்து தருமா?

2005 மார்ச் 17]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்கு அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார்பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் வரை போதுமான அளவிற்கு பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் இருக்கின்றன. எனவே, மேற்கண்ட வழித்தடங்களில் புதியதாக பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிற நேரத்திலே, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார்பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் செல்வதற்கு பகுதி பகுதியாக பேருந்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, பகுதி பகுதியாக என்று சொல்கின்றபோது மக்கள் ஒரு பேருந்திலே வந்து ஏறி இறங்கி, இன்னொரு பேருந்துக்கு மாறிச் செல்வதற்குக் காலதாமதம் ஆகிறது. பேருந்து கிடைப்பதற்கு வசதியற்ற சூழ்நிலை. மாணவ மாணவிகள், கல்லூரி, பள்ளிகளுக்குச் செல்வதற்கு இடையூறு. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்தப் பேருந்து வழித்தடத்திலே, தொடர்ந்து, அதாவது அரியலூரிலிருந்து ஜெயங்கொண்டம் வரையிலே செல்வதற்கு, அரசு பேருந்தை இயக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி வழியாக ஜெயங்கொண்டம் வரை போதுமான அளவிற்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், வழித்தடங்களில், அந்தப் பகுதி பகுதியாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கு போதுமான அளவிற்கு பயணிகள் அடர்வு இல்லை. இருந்தபோதிலும், பகுதி பகுதியாக ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்து ஒன்றை தனியாக அங்கு நீட்டித்து—தொடர்ந்து அரியலூரிலிருந்து ஜெயங்கொண்டம் வரை நீட்டிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.